
நாட்டுப் பற்று, சமூக சீர்திருத்தப்பற்று,
மொழிப்பற்று மூன்றும் நிறைந்த

# முதல் தேச பக்தர்



திரு. ஜி. சுப்பிரமணிய ஐயரின் (1855 - 1916)

**63-வது** நினைவு நாள் வெளியீடு

## குறிப்புரை

திரு. ஜி. சுப்பிரமணிய ஐயரின் அறுபதாம் ஆண்டு விழாவின் போது 1915-ல் தேசபக்தர் விருதை சிவஞான யோகி அவர்கள் யாத்தளித்த வாழ்த்துப் பா இன்று 18-4-79 மறுபதிப்பாக வெளியிடப் படுகிறது. அரிய இச் சிறு வெளியீட்டை அண்மையில் 'சாதனுடிரஸ்ட்' நூலகத்தில் கண்டேன். திரு. ஜி. சு. வைப் பற்றிய சுருக்கமான அறிமுகத்திற்கு உதவுவது நகல் எடுக்க ஆர்வமுடன் அநுமதித்த திரு.ராஜம் அவர்களுக்கு என் நன்றி உரியது. இவ் வெளியீட்டை அன்பளிப்பாக வழங்கிய டாக்டர் கிருஷ்ண ஸ்ரீநிவாஸ் அவர்களுக்கும் என் நன்றி.

பெ சு. மணி

சுதேச மித்திரன் பத்திராதிபர்.

# ஸ்ரீ மான் ஜி. சுப்பிரமணிய ஐயரின்

# அறுபதாம் ஆண்டு நிறைவு

வாழ்த்துப் பா.

(இஃது தமிழ்ப் பிரமசூத்திராசிரியர்,
மறைத்திருவன் சுவாமி
விருதை, சிவஞானயோகிகளா
லியற்றப்பட்டது.)

## பிறப்பு — பெயர்

திருவளர் பொழிலெலாஞ் செய்துகாத் தழிக்கும்
ஒரு தனிச் செல்வ னுயரருடன்னால்
நிலவுமிப் புவியிற் புலமிக் குடைய
மக்கண் முற்றோன்றிய பக்கமெனப்படும்
தமிழகஞ்சார்ந்த விமிழ் சோணாட்டிற்
பாவிற் பெரிய நாவுக்கரசு
மெய்யுருக் கண்ட வையஹதனில்
துணிமறைதேர்ந்த கணபதியையர்
நன்மனையாகிய பொன் தருமாம்பாள்
வயிற்றிற்றமிழுல குயச்சிறப் பெய்தி
ஆயிரத்தெண்ணூற் றைம்பத்து மூன்றா
வாயுங் கிறித்தாண்டு தைம்மதியமையில்
தோன்றியவோதித் தோன்றல்வாழ்க
செப்புயர் பெருமைச் சுப்பிரமணிய
நிறை பெயர்புனைந்த மறையவ வாழ்க

## இயல்பு

பிறந்த நாட்டன்பிற் சிறந்த கோளரியே 16
நிலையாமுறுதியி லலையாமலையே
சூழ்ச்சியின் மிக்க வாழ்ச்சி கடலே 18
வருந்து முயிர்ப் பயிர்க் கிரங்கிய ருடவில்
பெரும் பெயல்வாய்த்த கருஞ்சூண் முகிலே 20
தாய் மொழி போற்றுந் தூய வாழ்க
ஆங்கிலம் வடமொழி யூங்க வாழ்க 22

## ஹிந்துப் புதினந்தாள் : அதிற் செயல்

அருள் வீரராகவாசாரி யோடு
புரிந் தொண் ஹிந்துப் புதினத் தாளைத் 24
துவக்கிச் சேலத் திந்துக்களுக்கும்
மூகம்மதியர்க்கு மூண்டக கத் 26
தென்று முலக வின்புக் குழைக்கும்
விசய ராகவாசாரியார் முன்னைய 28
குறைபுரியாத பெருமைசால் பற்பலர்
தன்னு டொருவி முந்நீர் கடந்து 30
தத்துறு காவல் பத்தாண் டிருத்தல்
ஆகிய தண்டந் தீதி லெய்தியதைத் 32
தெரிந்தவ ணிகழ்ந்த அருஞ் செய லனைத்தின்
உண்மை யிஃதென வண்மை ஹைகோர்ட் 34
சென்னைக் கவர்ன் மெண்ட் இந்தியா கவர்ன்மெண்ட்
டறிந்து தெளிய வருந்தி மென்மேல் 36
வரைந்து விடுதலை பொருந்தச் செய்த
உண்மைக் குழைக்கும் வண்மையே வாழ்க! 38

## சுதேசமித்திரன் தோற்றமும் செயலும்

ஆங்கில மறியா ரதை வேண்டா மையிற்
செந்தமி ழறிந்தோரும் பயன்பட வெணி 40
ஆயிரத் தெண்ணூற் றெண்பத்திரண்டாம்
ஆண்டினிற் சுதேச மித்திர னென்னும் 42
நீளெழிற் புதினத் தாளைத் தந்ததில்
செந்தமிழ் நிலத்தின் முற்று சீர்த் தேற்றமும் 44
மற்றுள நாட்டிற் கற்றவர் செய்தியும்
அரசியலறிவும் பிறர்சீர்த் தேற்றமும் 46
பயன்மிகு முலக வியற்கை யுணர்வும்
பெற்புறு கைத்தொழில் நுட்பமுஞ் செட்டும் 48
நாட்டன் புணர்ச்சியுஞ் சேட்புலச் செய்தியும்
பற்பல நூல்களின் திட்பமும் பிறவும் 50
தமிழ் நாடெங்கு மமர்ந்துதாமுறை
சிற்றூரன்றி மற்றொன் றறியா 52
மக்களுமோர்ந்துயத் தக்கபடியறைந்
தறிவுதருந் தெய்வதருவே வாழ்க! 54

## இலந்தன் சென்று வெல்பிக் கமிஷனில் சாட்சி கூறியது

நிலவு மிந்தியச் செலவு தீர்மானிக்க
மல்கு சிறப்பின் வெல்பிக் கமிஷன் 56
முன் சொற்பொழிவில் வன்மையனு மண்
பகர் சுரேந்திரநாத் பானர்ஜி வெம்பைத் 58

தட மிகு டின்ஷா டெல்ஜிவாச்சா
இந்தியர் தமக்கொரு தந்தையெனத் தகும்
கோபால கிருஷ்ண கோகலே தம்மொடு
பன்னூற்றிமை யின்பஞ்செல்வம்
கைத் தொழில் செட்டு வெற்றி மன்னுரிமை
கட்டுத் தன்னில மாதலினிலந்தன்
என்னப் படுபுரி துன்னிக் கலங் காக்
கரியாய் நின்ற பொற் களிறே வாழ்க!
கேட்போர் பொறியும் வேட்கையுளமும்
பிறிதிடஞ்சாரா தொருமையுற்றிவர்ந்து
தெள்ளமிழ் துண்டென வுள்கிக்களிக்க
இனித்ததமிழினும் நுனித்தவாங்கிலத்தும்
பெருஞ்சொன்மழை பொழி யருந்தவ வாழ்க
பொது நல விருப்பம் புகட்டு தாய் வாழ்க!

## புதினத்தாட் புலமை

உடலைப் பொருளை யுயிரைக் கருதா
தடலினுட்டா ரண்ணிய குறைகளை
யின்றவர்க் குணர்த்தி யிரந்தவர்ப் புரந்தும்
மறைவிற்புரி குறை மற்றவ் வுழிக் கண்
ணுடனிருந்தறிந்தா ரொத்தெடுத்துரைத்தும்
நிலமிசைப் பிழைக ணிகழாது காத்தும்
இருந்துழி யிருக்க விருநிலமெங்கணும்
பொருந்தருஞ்செய்தி புலனுறத் தெரித்தும்
நடுமுறைநாடு நல்லிறை யவர்க்குச்
கடல்பொருமுள்ளக் கவினுற மமைச்சர்

போன்று பற்பல சூழ்ச்சி புகன்று
சான்றபஃறுணை சண்ணி மகிழ்ந்தும்
நன்னூறுணர்ச்சி கண்ணுதவரும்
பன்னூற் பொருணலம் பருகிச் சிறக்க
அன்னை தந்தை யன்பினனையன்
மன்னனென்ன மருவியுரைத்தும்
இனித்தபன்னல மிடைவிடாதியற்றல்,
தனிப் புதினத்தாட் டலைவரியல்பாம்
அவ்வியல் பனைத்துஞ் செவ்விதினிறைந்த
அரும்பெறற் றெய்வத் திருவே வாழ்க!

## மித்திரன் தினசரிப் பெருமை

உணவினுமின்பப் புணர்வினு மினிது
விரும்பித் தமிழர் அரும் பேருக
வேட்டுப் படிக்க நாட்புதினந்தாள்
ஆக்கித் தெளிவு தேக்கவ வாழ்க!
மெத்துஞ் சுதேச மித்திரன் றனக்கு
வெள்ளிவிழாக் கண்ட வள்ளல் வாழ்க!

## மாட்சி

முந்துறு மன்பாற் சுந்தரம் பிள்ளை
தீட்டிய காதை கேட்டவ வாழ்க
சென்னையாட்சியர் முன்னொருக்கால் நீ
உலகர் பாலன்பாற் சொலுமுறையிலையங்
கொண்டு பிடித்து மண்டியாராய்ந்து
குற்றமிலனெனத் தெற்றெனத் தேர்ந்து
விடுத்தருளியதால் தடத்திரு மெய்மைக்
காகவுழந்த வாகரிச் சந்திரன்

ஒத்த பெருமை யுற்றமெய்ம் முனி
என்றுலகேத்து கின்றவ வாழ்க!
மீட்டுமணஞ் செயல் பூத்த பெண்மணத்தல்
மிருதியின்னெறியெனத் தெரிந்தவ வாழ்க!
நீவித்திய நாட்டன்பு மறிவும்
முளைத்தமை போலப் பருத்துச் செழித்தும்
காய்த்தும் பயன்பல வாய்த்திவண் வாழ்க!
தென்னாப்பிரிக்கைப் போயர் தம்மால்
உடல் பொருளாவிக் கொடையனானை
காந்தி முன்னைய விந்தியர் படு மினல்
முறையின் விளங்க வுரைத்து நம் நாட்டார்
பொருட்டுணை செய்யத் தெருட்டிய தெய்வ
வொண்மையியல்புடை யண்ணல் வாழ்க!
நின்னச்சியந்திர சாலை வாழ்க!
சுதேசமித்திரப் பெயர்த்தாள் வாழ்க!
நின் மகன் விஸ்வநாத வேள் வாழ்க!
வாழி நின்குடி வாழி நின் பொருள்
வாழி நின் புகழ் வாழி நின் பொறி
வாழி நின்றனறிவு மன்பும்
வாழி நின்னுடல் நலமும் வலியும்
வாழி நின்னறுப தாண்டின் நிறைவு
வாழி நீடுழி நீ வாழி வாழியே!

64 — தன் + இலம் = இலந்தன், மொழி நிலை மாற்றம்.
74 — இந்தியா மன்னிறை முடி சூட்டு வாழ்த்துப்பா
அடி 314 — 331 வரை: இஃது இந் நூலாசிரியரது.
98 வெள்ளி விழா silver jubilee

---

ஸ்ரீ சுரபி அச்சகம், மாம்பலம், சென்னை-33.